பக்கங்கள்: 12 விலை : 20/-

# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 11 செவ்வாய்க்கிழமை 24.03.2020 கதிர் 07

## 2,262 பேர் கைது!

கொழும்பு, மார்ச் 24

பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 2262 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை மாலை 6 மணி முதல் இதுவரையான காலப் பகுதியில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ஐ)

## 101 பேருக்கு கொரோனா!

கொழும்பு, மார்ச் 24

கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 4 பேர் இன்று செவ்வாய்க்கிழமை மாலை அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார் இதனடிப்

11



# யாழ்ப்பாணத்தில் கொரோனா பரவ காரணம் பொலிஸ்!

### வடக்கு ஆளுநர் குற்றச்சாட்டு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 24

சுவிற்சர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணம் வந்த போதகரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தாமல் யாழ்ப்பாணத்தில் பொலிஸாரே காப்பாற்றினர். இதனால் இங்கு கொரோனா பரவப் பொலிஸாரே காரணம்.

– இவ்வாறு குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சாள்ஸ்.

11

## தயார் நிலையில் அம்புலன்ஸ் ஹெலி



கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட நோயாளர்களை அழைத்துச் செல்ல வசதியாக விமானப்படையின் எம்ஐ -17 ரக ஹெலிக்கொப்டர் ஒன்று விமான அம்புலன்ஸாக உருவாக்கப்பட்டுள்ளது.

விமானப்படைத் தளபதி, ஏர் மார்ஷல் சுமங்கல டயஸின்

11

## வறுமையான யாழ். மக்களுக்கு நாளை முதல் நிவாரணப் பணி

### மாவட்ட செயலர் மகேசன் அறிவிப்பு

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 24

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப்பொருள்கள் வழங்கும் உதவித்திட்டம் அரசால்

11

## கட்சித் தலைவர்கள் கூட்டத்தை தொடர்ந்து கூட்டி ஆராய முடிவு!

கொழும்பு, மார்ச்.24

தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா பேரிடர் நெருக்கடி தொடர்பில் கட்சித் தலைவர்களின் கூட்டத்தை தொடர்ந்து அவ்வப்போது கூட்டி விடயங்களை ஆராய்வது என இன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அலரி

11

## முகக்கவசங்களுடன் கட்சித் தலைவர்கள்!

### அலரிமாளிகைக் கூட்டத்தில்





கொழும்பு, மார்ச் 25

கொரோனா தாக்கம் காரணமாக நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமை பற்றி ஆராய்வதற்கு இன்று அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்றது.

இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உட்பட

11

## அதி அபாயமான வலயங்களாக கொழும்பு,கம்பஹா,களுத்துறை

### அந்தப் பகுதிகளில் ஊரங்கு நீடிப்பு

கொழும்பு, மார்ச் 24

கொழும்பு, கம்பஹா மற்றும் களுத்துறை மாவட்டங்களில் கோரோனா வைரஸ் தொற்றுப் பரம்பல் வேகமாக இருப்பதால் அதிக அபாய வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அதனால் மூன்று மாவட்டங்களிலும் மறு அறிவித்தல் வரை ஊரடங்குச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

11

## கிளிநொச்சி நகரில் 6 இளைஞர்கள் கைது!

கிளிநொச்சி, மார்ச் 24

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோது சட்ட விதிகளை மீறிய குற்றச்சாட்டில்

11




## முகக் கவசங்கள் அணியாதோரை துரத்தும் பொலிஸ்

### அவசியமில்லை என்கிறது சுகாதாரத்துறை

கொழும்பு, மார்ச் 24

ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டிருந்த போது, முகக்கவசங்கள் அணியாமல் சென்றவர்கள் வங்கிகள், பல்பொருள் அங்காடிகள், மருந்தகங்களுக்குள்

11

அறிவித்தல்கள் – விளம்பரங்கள்
உங்களின் நிலை அறிந்து நாங்கள் உதவுகிறோம்!
அத்தியாவசிய, அவசர அறிவித்தல்கள் இலவசம்!
ஏனையவை மிகக் குறைந்த கட்டணத்தில்!!
வீட்டில் இருந்தவாறே உங்கள் தேவைகளையும் தகவல்களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். தினமும் காலையும் மாலையும் ஊரில் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கைபேசிகள் மற்றும் கணினிகளில் தவழும் காலைக்கதிர் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரியுங்கள்.
விளம்பரங்களை இப்பொழுது பிரசுரியுங்கள்!
பின்னர் கட்டணத்தைச் செலுத்தலாம் !!
மிகக் குறைந்த கட்டணங்கள்
தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

# இறுதி எச்சரிக்கை!

## வெளிநாடுகளில் இருந்து வந்து பதியாதவர்கள் அனைவருக்கும்

மார்ச் 10 ஆம் திகதிக்குப் பின்னர் வெளிநாடுகளில் இருந்து நாடு திரும்பி, கொரோனா வைரஸ் தொற்று சோதனைக்கு உட்படாமல் தலைமறைவாகியோருப்போருக்கு அரசாங்கம் இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இத்தகையோர் தொற்று நோயப் பரிசோதனைக்குட்படாமலும் தம்மைப் பதிவு செய்யாமலும் இருந்தால் அவர்கள் தொற்று நோய்த் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுவார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு வெளிநாடுகளிலிருந்து வந்து சோதனைக்குட்படாது இருப்பவர்கள் இன்று நள்ளிரவு 12 மணிக்குள் அருகிலுள்ள பொலிஸ் நிலையம் அல்லது வைத்தியசாலையில் தம்மைப் பதிவு செய்ய வேண்டும் என அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

அவ்வாறு கைது செய்யப்படுபவர்கள் நிச்சயமாக 14 நாள்கள் கண்காணிப்பு நிலையங்களில் தங்கவைக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாவடி – சுதுமலை வீதியில் ஒரு பகுதி மக்களின் பாவனைக்கு நேற்றுத் தடை

யாழ்ப்பாணம், தாவடி – சுதுமலை வீதி இன்று காலையிலிருந்து பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

அப்பகுதியில் அண்மையில் கொரோனா தொற்றுக்கு உள்ளான ஒருவர் வசித்து வந்திருந்த நிலையில் நேற்றைய தினம் தாவடி பகுதியில் கிருமித் தொற்று அகற்றும் வேலைத்திட்டம் சுகாதாரப் பிரிவினரால் முன்னெடுக்கப்பட்டது.


கொரோனா தொற்றுடன் சுவிர்சர்லாந்து நாட்டில் இருந்து வந்து அரியாலைப் பகுதியில் ஆராதனையில் ஈடுபட்ட மத போதகரைச் சந்தித்துப் பேசியவர் எனக் கருதப்படும் தாவடி வாசியே இங்கு யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளான நிலையில் அடையாளம் காணப்பட்ட முதல் நபராவார்.

இதனால் அவர் வசித்த தாவடிப் பகுதி சுகாதாரத் துறையினரின் தீவிரக் கண்காணிப்புக்கு உள்ளாகியுள்ளது. அப்பகுதியில் இருந்து வெளியே செல்பவர்களுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. குறித்த பகுதியில் இராணுவம், பொலிஸார் விசேட பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள்.

இன்றைய தினம் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியூடாக தாவடி சந்தியில் இருந்து சுதுமலைக்கு செல்லும் பாதையில் குறித்த ஒரு பகுதி பொதுமக்கள் பயன்படுத்துவதற்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

நேற்றைய தினம் அங்கு கிருமித் தொற்று நீக்கும் நடவடிக்கையில் சுகாதாரத் துறையினர் ஈடுபட்டிருந்தனர். எவரும் அவ்விடத்திற்குச் செல்ல அனுமதிக்கப்படாத நிலையில் இன்றைய தினம் அந்த வீதியைப் பொது மக்கள் பயன்படுத்தத் தடை விதிக்கப்பட்டிருந்தது. பொதுமக்கள் மாற்றுவழிகளை உபயோகப்படுத்தினர்.

# இரண்டு வாரங்களில் 20 ஆயிரம் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்றும் பேராபத்து



யாழ்ப்பாணம், மார்ச். 24

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்களின் எண்ணிக்கை இரண்டு வாரங்களில் 20 ஆயிரமாக அதிகரிக்கும் வாய்ப்புக்கள் இருக்கின்றன.

உரிய தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படாவிட்டால் இந்த விபரீத நிலைமை ஏற்படும் என மருத்துவ அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் பண்ணையில் அமைந்துள்ள வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் இன்று நடைபெற்ற கலந்துரையாடலிலேயே மருத்துவர்களால் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது.

உலகளாவிய ரீதியில் பெரும் அச்சுறுத்தலுக்குரிய விடயமாக கொரோனா தொற்று மாறியுள்ளது. இலங்கையிலும் கொரோனா தொற்றுக்கு இலக்கான 97 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இலங்கையில் கொரோனா தொற்று பரவும் வீதம் தொடர்பான வரைபு உலகின் ஏனைய நாடுகளில் பரவும் வீதம் தொடர்பான வரைபுடன் அச்சொட்டாக ஒத்துப் போகின்றது. இப்படியே சென்றால் இன்னும் இரண்டு வாரங்களில் இலங்கையில் 20 ஆயிரம் பேர் கொரோனா தொற்றுக்கு இலக்காவார்கள். அவ்வாறு நடக்கக் கூடாது என்பதுதான் எங்களின் விருப்பம். உரிய தடுப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படாவிட்டால் இந்த நிலைமை நிச்சயம் ஏற்படும் – என்று மருத்துவர்கள் அந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்கள்.

# முதலில் கொரோனா பிடித்த சுற்றுலா வழிகாட்டி மீண்டார்

கொரோனா வைரஸால் முதன்முதலில் பாதிக்கப்பட்டு பின்னர் முழுமையாக குணமடைந்த 52 வயதான சுற்றுலா வழிகாட்டி தனக்கு ஏற்பட்ட அனுபவங்கள் பற்றி விவரித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து வந்த சுற்றுலாப் பயணிகளுக்கு வழிகாட்டியாகச் சென்ற இவர் அந்தப் பயணிகளிடமிருந்து கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானார் எனக் கருதப்படுகின்றது.

சிங்கள ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட நேர்காணலில் அவர் தனது அனுபவங்களை குறிப்பிட்டுள்ளார்.

அதில் அவர் தெரிவித்திருப்பவை வருமாறு:-

கொரோனா வைரஸ் தொற்றிய பின் எனக்கு தொண்டையில் வலி ஏற்பட்டது. பின்னர் இரவில் எனக்கு முடியாமல் போனது.

இதற்கு மருந்து எடுக்கும் போது எனக்குத் தொண்டையில் கட்டி என வைத்தியர் கூறி மருந்து தந்தார்.

மருந்தை குடித்த பின் எனக்கு காலையில் சுகமாகியது. எனினும் மீண்டும் இரவு முடியாமல் போனது.

பின்னர் எனக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதி செய்யப்பட்ட பின் மிகவும் பயம் ஏற்பட்டது.

ஆனால் வைத்தியசாலைக்குச் சென்று அனுமதிக்கப்பட்ட பின் மருத்துவம் செய்வதைப் பார்த்த பிறகுதான் சுகமாகி விடுவேன் என்ற நம்பிக்கை ஏற்பட்டது. அது வரை எனக்கு மிகவும் பயம் ஏற்பட்டது.

ஐ.டி.எச் வைத்தியசாலையின் சேவை மிகவும் சிறந்தது. நான் அங்கு தனிமைப்படுத்தப்பட்ட அறையில் வைக்கப்பட்டு இருந்தேன்.

பின்னர் எனக்கு சிறப்பான வைத்தியம் பார்க்கப்பட்ட பிறகுதான் நான் சுகமாகி விடுவேன் என்று நம்பிக்கை ஏற்பட்டது. – என அவர் கூறினார்.

## படையினருக்கு அதிகாரமளிக்கும் வர்த்தமானி அறிவிப்பு மேலும் நீடிப்பு

*கொழும்பு, மார்ச்24*

*நாடு முழுவதும் பொது அமைதியை நிலைநாட்ட பாதுகாப்பு படையினருக்கு அதிகாரமளிக்கும் வர்த்தமானி அறிவித்தலை மேலும் ஒரு மாதத்திற்கு ஜனாதிபதி நீடித்துள்ளார்.*

*இதற்கான வர்த்தமானி நேற்று வெளியானது.*

*உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை தொடர்ந்து, பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் அதிகாரம் முப்படையினருக்கும் வழங்கும் வர்த்தமானி வெளியாகி வருகிறது.*

## வங்கிகள் பூட்டப்பட்டமையினால் இன்று அந்தரித்த பொது மக்கள்!

**யாழ் நகரில் அரச வங்கிகள் சில குறிப்பிட்ட நேரத்தில் பூட்டியமையால் பல பொதுமக்கள் அவதியுற்றனர்.**

**கொரோனா அச்சுறுத்தலால் நாடு முழுவதும் ஊரடங்கு அமுல்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாட்டிலிருந்து வந்த பலர் மறைந்திருந்த புத்தளம், கம்பஹா, கொழும்பு மாவட்டங்களில் ஊரடங்கு நீடிக்கப்பட்டிருந்தது.**

**இதேவேளை, சுவிஸ் மத போதகரின் வருக்கியினால் வடக்கு மாகாணமும் கொரோனா அச்சுறுத்தலுக்குள்ளாகியது. வடக்கிலும் ஊரடங்கு நீடிக்கப்பட்டிருந்தது.**

**மூன்று நாள்களின் பின்னர் இன்று காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டிருந்தது.**

**யாழ் நகரத்திலுள்ள அரச வங்கிகள் சில இன்று காலை 8 மணிக்கு திறந்து 10.30 மணிக்கே வங்கியைப் பூட்டி விட்டன.**

**தூர இடங்களில் இருந்து வங்கிக்கு வந்த பெருமளவானவர்கள் இதனால் ஏமாற்றமடைந்தனர். சில முதியவர்கள் கண்ணீர் விட்டு அழுதமையையும் காண முடிந்தது.**

**வங்கியில் அடகு வைத்துப் பொருள்களைக் கொள்வனவு செய்ய வந்தபோதும், வங்கிகள் பூட்டியமையால் அடுத்து என்ன செய்வதென வங்கிகளின் முன்னால் நின்றுவர்கள் அந்தரித்த துயரமான காட்சிகளைக் காணக்கிடைத்தது.**

## சார்க் கொரோனா வைரஸ் தடுப்பு நிதியத்திற்கு

# 50 லட்சம் டொலரை வழங்கியமைக்கு இலங்கை ஜனாதிபதிக்கு மோடி நன்றி



சார்க் நாடுகளில் கொரோனா வைரஸை தோற்கடிப்பதற்கான நிதியத்திற்கு ஐம்பது லட்சம் அமெரிக்க டொலர்களை (இலங்கைப் பணத்தில் சுமார் 95 கோடி ரூபா) வழங்கிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிற்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடி நன்றி தெரிவித்துள்ளார்.

சார்க் நாடுகளின் தலைவர்களுக்கு இடையில் கடந்த 15 ஆம் திகதி வீடியோ மாநாடொன்று நடைபெற்றது.

அதன்போது பிராந்தியம் என்ற வகையில் இச்சவாலுக்கு ஒன்றிணைந்து முகங்கொடுப்பதற்கான நிதியைத் திரட்டிக்கொள்வதற்கும் தலைவர்களுக்கிடையில் இணக்கம் காணப்பட்டது.

அதன்படி அந்த நிதியத்திற்காக இலங்கை 50லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்குவதாக ஜனாதிபதி நேற்று முன்தினம் அறிவித்தார்.

அதற்கு நன்றி தெரிவிக்கும் விதமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பின்வருமாறு டுவிட்டர் பதிவொன்றைச் செய்திருக்கிறார்:

'சார்க் நாடுகளின் கொவிட் – 19 ஐ எதிர்கொள்வதற்கான அவசர நிதியத்திற்கு' 5 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியமைக்காக இலங்கை ஜனாதிபதிக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த மோசமான வைரஸ் தொற்றை எதிர்கொண்டு இல்லாதொழிப்பதில் எமக்கு இடையிலான ஒத்துழைப்பு வலுவாகத் தொடரும்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online

## கலைக்கப்பட்ட நாடாளுமன்ற மீளக் கூட்டுதல்!

இன்றுகாலைபிரதமரின்அலரிமாளிகைஉத்தியோகபூர்வ இல்லத்தில்நடைபெற்ற கட்சித்தலைவர்களின் கூட்டத்தில் முழு இலங்கையின் முக்கிய அரசியல்வாதிகள் அனைவருமே திரண்டிருந்தனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பஸில் ராஜபக்ஷ, சபாநாயகர் கரு ஜயசூரிய, ரணில் விக்கிரமசிங்க, சஜித் பிரேமதாஸ, முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன, எம்.ஏ.சுமந்திரன், டக்ளஸ் தேவானந்தா, மனோ கணேசன், திகாம்பரம், ரிஷாத் பதியுதீன், ரவூப் ஹக்கீம், வண. ரத்ன தேரர், விஜித ஹேரத், தயாசிறி ஜயசேகரா, மஹிந்த அமரவீர, உதயகம்மன்பில, விமல்வீரவன்ஸ, தினேஷ்குணவர்த்தன, ஜி.எல்.பீரிஸ், செந்தில் தொண்டமான், வாசுதேவ நாணயக்கார, திஸ்ஸவிதாரண என்று பல அரசியல்வாதிகள் கலந்து கொண்டனர்.

இந்த நீண்ட பட்டியலுடன் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, பிரதமரின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், இராணுவத் தளபதி, பதில் பொலிஸ் மா அதிபர், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் மற்றும் பல உயர் அரச அதிகாரிகள் பங்கு பற்றினர்.

இப்படி இந்தக் கூட்டத்தில் பல முக்கியஸ்தர்களும் பிரபலங்களும் பங்குபற்றியமை தொடர்பில் விசேட குறிப்பு ஒன்று சம்பந்தப்பட்டவர்களினால் வெளியிடப்பட்டது.

நாட்டின் இத்தகைய நெருக்கடி நிலையைக் கையாள்வதற்கு – முழு நாட்டையும் ஒரு பேரிடர் தாக்கி இருக்கையில் அதனை எதிர்கொள்வதற்கு – உயிரோட்டமுடைய நாடாளுமன்றம் ஒன்று இருப்பது அவசியம், ஆகவே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை விரைந்து கூட்ட வேண்டும் என்று இன்றைய கூட்டத்தில் எதிரணித் தரப்பினால் கருத்து முன்வைக்கப்பட்டது.

அதை ஆட்சேபித்த ஆளும் தரப்பின் சில முக்கியஸ்தர்கள் கொரோனா தொற்றினால் நாடே முடங்கியிருக்கும் போது நாடாளுமன்றத்தைக் கூட்டுவதா, அது ஆபத்தானது என்று கருத்து வெளியிட்டனர்.

அப்போது, குறுக்கிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ.சுமந்திரன் சில விடயங்களைச் சுட்டிக் காட்டினார்.

"கொரோனா ஆபத்து நாட்டை நெருக்கடியில் ஆழ்த்தியிருக்கும் இச்சமயத்தில் நாடாளுமன்றத்தைக் கூட்டுவது மட்டுமல்ல, இன்று இப்படி ஒரு கூட்டத்தைக் கூட்டியதே தவறு. நாட்டு மக்களை 'வீடுகளுக்குள் முடங்கியிருங்கள், ஒன்று கூடாதீர்கள்!' என்று ஆலோசனை கூறி வற்புறுத்தியபடி, நாங்கள் இப்படிக் கூடுவது நாட்டு மக்களுக்கு ஒரு தவறான செய்தியை – வழிகாட்டலை – கொடுக்கும். அது மாத்திரமல்ல, இப்படி நாட்டின் அரசியல் தலைவர்கள் எல்லோரும் கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில் ஒன்று கூடுவது ஆபத்தானதும் கூட. நாட்டின் தலைவிதியையே அது பாதித்து விடும். ஆனால் இப்படி ஓரிடத்தில் கூடாமல் தூரங்களில் இருந்து கொண்டே இதே போன்று உயிரோட்டமாக நாம் கலந்துரையாடக் கூடிய வகையில் ஏற்பாடுகளைச் செய்து கொள்ளமுடியும். அற்கான தொழில்நுட்பம் இப்போது உச்சத்தில் உள்ளது.

*"இத்தகைய பிரச்சினையையும் அதனால் எழும் சிக்கல்களையும் எதிர்கொண்டு சமாளிப்பதற்காக நாம் அவசர சட்டங்களை ஆக்கவேண்டியிருப்பது தவிர்க்கவே முடியாத கட்டாயமாக நமக்கு வரும். அதுவும் பொதுத் தேர்தல் தாமதிக்கும்போது ஏற்படக் கூடிய சட்டச் சிக்கல்களை எதிர்கொள்வதற்கு நாம் புதிய அவசர சட்டங்களை ஏற்படுத்துவது கட்டாயமானதாகும். அதற்காக ஏதோ ஒரு கட்டத்தில் நாம் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுவது தவிர்க்கவே முடியாத அத்தியாவசியமாகும். அப்போது நெருக்கடி – இக்கட்டு – இன்னும் மோசமாக இருக்கக் கூடும்.*

*"அப்போது நாடாளுமன்றத்தை ஒரே இடத்தில் கூட்டுவது நமக்குச் சாத்தியமற்றுப் போகலாம். அச்சமயத்தில் புதிய தொழில்நுட்ப வசதிகளுடன் பல்வேறு இடங்களில் இருந்தபடி நாடாளுமன்றத்தைக் கூட்டக் கூடியதாக இருக்கும் என நினைக்கிறேன்."* – என்று கூறியிருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

அவரது உரைக்கு இன்றைய கூட்டத்தில் பெரிய வரவேற்புக் கிட்டாவிட்டாலும் பெரிய எதிர்ப்புக் காட்டப்படவில்லை.

குறைந்த பட்சம் இந்தக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தையாவது தவறாது கூட்டி அல்லது ஏதோ ஒரு வகையில் உரையாடலை ஏற்படுத்தி விடயங்களைக் கையாள நடவடிக்கை எடுக்கப்படும் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இந்தக் கூட்டத்தின் முடிவில் அறிவித்தார்.

எது, எப்படியென்றாலும் விடயங்கள் போகின்ற போக்கில், கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவது தவிர்க்க முடியாத கட்டாயமாகவே அரசுக்கு வரும். அது இன்று இல்லாவிட்டாலும் இன்னும் இரு வாரங்களிலாவது அரசை அவ்வழிக்கு நெட்டித் தள்ளும்.

# ஊரடங்கு வேளையில் மதுபான விற்பனை பொலிஸாரிடம் சிக்கிய மதுபானச்சாலை



ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த நேரத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானங்களை விற்பனை செய்த மதுபான சாலை ஒன்று நேற்று மாலை திருகோணமலை தலைமையக பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

நாட்டில் ஊரடங்கு சட்டம் நடைமுறையில் இருந்த நிலையில் மதுபான சாலைகளை திறப்பதற்கு அரசினால் அனுமதி மறுக்கப்பட்டிருந்தது.

அவ்வாறிருக்க சட்டவிரோதமான முறையில் கூடுதல் விலைக்கு மதுபானங்களை விற்பனை செய்ததாகக் கூறப்படும் மதுபான சாலை குறித்து திருகோணமலை தலைமையகக் காவல்துறையின் மது போதை தடுப்புப் பிரிவிற்கு இரகசியத் தகவல் கிடைத்தது. அதை அடுத்து சம்பவ இடத்திற்குவிரைந்த பொலிஸார் விற்பனைக்காக அங்கு வைக்கப்பட்டிருந்த மதுபானப் போத்தல்களைக் கையகப்படுத்தியமையோடு அங்கிருந்த ஒருவரையும் கைது செய்துள்ளனர்.

மொத்தமாக 200க்கும் அதிக மதுபான போத்தல்களும் இரண்டு லட்சம் ரூபா பணமும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபரை தடுத்து வைத்துள்ளதோடு திருகோணமலை நீதிவான் முன்னிலையில் அவரை முன்னிலைப்படுத்த உள்ளனர் என வும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வங்கிக் கிளை 14நாள்கள் பூட்டப்படலாம்?

யாழ். கைதடி சந்தியில் உள்ள அரச வங்கியின் கிளையில் பணியாற்றும் பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான நபரின் வீட்டுக்கு அருகில் இருப்பதுடன், அந்த நபரின் உறவினர் என அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில், அவர் பணியாற்றும் வங்கி கிளை 14 நாள்கள் பூட்டப்படலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் குறித்த பணியாளர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன், வங்கிக் கிளை அலுவலகத்தில் கிருமி நீக்கிகள் இன்று விசிறப்பட்டிருக்கின்றன.

# பலாலியில் தனிமைப்படுத்தல் மையத்திற்கு 28 பேர் இரு கட்டங்களாக அனுப்பிவைப்பு

கொரோனா தொற்றுக்கு உள்ளான சுவிஸ் மதபோதகருடன் யாழ்ப்பணத்தில் நேரடித் தொடர்பிலிருந்தனர் என அடையாளம் காணப்பட்ட 18 பேர் பலாலியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையத்திற்கு இரண்டு கட்டங்களாக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என யாழ்ப்பான மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அவர் இன்று நடத்திய பத்திரிக்கையாளர் சந்திப்பிலேயே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாணம் அரியாலையில் ஆராதனைக் கூட்டம் நடத்துவதற்கு சுவிஸிலிருந்து வந்த மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது. அவருடன் ஓர் அறையில் தனித்துச் சந்தித்த தாவடியில் வாசிக்கும் நபர் ஒருவருக்கு கொரோனா இருப்பது உறுதியானது. இதனையடுத்து மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 18பேர் அடையாளப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 12பேர் நேற்று முன்தினம் காலையும் எஞ்சிய 6 பேர் நேற்று முன்தினம் மாலையும் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர கண்காணிப்பில் உள்ளனர் எனவும் தெரிவித்தார்.

## அவசர சேவையாளர்களுக்கு

# ஊரடங்கு வேளையில் பொருள் விநியோகம்!

## பொலீஸ் மேற்பார்வையில்




யாழ்ப்பாணம்,மார்ச்24

யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தின் சகல மாவட்டங்களிலும் இன்று பிற்பகல் 2 மணியுடன் ஊரடங்கு சட்டம் நடைமுறைக்கு வந்த போதிலும் சுகாதாரத்துறை உட்பட அத்தியாவசிய சேவைகளில் ஈடுபடுபவர்களுக்கான பொருள் விநியோகம் பொலிஸாரின் மேற்பார்வையில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள சதொச விற்பனை நிலையத்தில் இவ்வாறு பொருள் விநியோகம் ஊரடங்கு சமயத்திலும் இடம்பெற்றது.

## தாய்லாந்து நாட்டினர் 696 பேர் வீட்டில் தனிமையில் அடைப்பு

### தமிழகத்தில் கொரோனா அச்சத்தை அடுத்து நடவடிக்கை

தமிழகத்தில் தாய்லாந்து நாட்டைச் சேர்ந்தவர்கள் தங்கியிருந்த பகுதியில் 169 குடும்பத்தைச் சேர்ந்த 696 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். இவர்கள் 14 நாட்களுக்கு வீட்டில் இருந்து வெளியேற தடை விதிக்கப்பட்டுள்ளது என ஈரோடு ஆட்சியர் சி.கதிரவன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சி.கதிரவன் செய்தியாளர்களிடம் கூறியதாவது: –

வெளிநாடுகளில் இருந்து மார்ச் 1ம்தேதிக்கு பிறகு யார் வந்திருந்தாலும், அவர்கள் குறித்து தகவல் கொடுக்க வேண்டுகிறோம். அவ்வாறு தகவல் கொடுத்தால், அவர்களை தனிமைப்படுத்தி கண்காணிக்க முடியும். இந்த தகவலை யாரும் மறைக்கக் கூடாது.

இதற்காக கிராம அளவில் தொடங்கி பல்வேறு குழுக்களை அமைத்து வெளிநாடு, வெளிமாநிலங்களில் இருந்து வந்தவர்கள், அவர்களில் காய்ச்சல் அறிகுறி உள்ளவர்களைக் கண்டறிய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான தாய்லாந்து நாட்டில் இருந்து வந்தவர்கள் தங்கியிருந்த ஈரோடு சுல்தான் பேட்டை, கொல்லம்பாளையம் பகுதியைச் சேர்ந்த 169 குடும்பத்தைச் சேர்ந்த 696 உறுப்பினர்களை அவரவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தி கண்காணிப்பில் வைத்துள்ளோம். இவர்களின் வீடுகளுக்கு தனிமைப்படுத்தப்பட்டதற்கான ஸ்டிக்கர் ஒட்டப்படும்.

இப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் 14 நாட்களுக்கு வீட்டை விட்டு வெளியில் வரக்கூடாது. வெளியில் இருந்து யாரும் அப்பகுதிக்குச் செல்லக் கூடாது. அதே நேரத்தில் அடிப்படைத் தேவைகளுக்காக அவர்கள் வெளியே வர அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் அடிப்படைத் தேவையை அப்பகுதியிலேயே நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் வெளி மக்களோடு பழகக் கூடாது. எதிர்வரும் 15 நாள்கள் மிக சவாலான காலமாகும். அதற்கு பொதுமக்கள், ஊடகம் என அனைவரின் ஒத்துழைப்பும் தேவைப்படுகிறது – என்றார்.

## பிறந்த குழந்தைக்கு பெயர் 'கொரோனா'

### ஒற்றுமையின் சின்னம் என்று பெற்றோர் விளக்கம்

இந்தியாவின் உத்திர பிரதேச மாநிலத்தில் பிறந்த பெண் குழந்தைக்கு, 'கொரோனா' என பெயர் சூட்டப்பட்டுள்ளது. உலக மக்களிடையே ஒற்றுமையை ஏற்படுத்தியதற்காக இப்பெயர் சூட்டப்பட் டதாக பெற்றோர்கள் தெரிவித்தனர்.

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 500ஐ எட்டியிருக்கிறது.. நேற்று 3 பேர் உயிரிழக்க, உயிரிழப்பு எண்ணிக்கை 10ஆக அதிகரித்துள்ளது, 103 பேருக்கு புதிதாக கொரோனா தொற்று உள்ளது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், உத்தர பிரதேச மாநிலம் கோரக்பூரில் உள்ள சோகவரா கிராமத்தில் பிறந்த பெண் குழந்தைக்கு, 'கொரோனா' எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளது. குழந்தையின் பெற்றோரின் சம்மதத்துடன், அவரது மாமா திரிபாதி என்பவர் இப்பெயரை சூட்டியுள்ளார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது : – உலகில் ஆயிரக்கணக்கான உயிர்களை கொன்று வரும் உயிர் கொல்லியான கொரோனா வைரஸ் மிகவும் ஆபத்தானது. ஆனால் மக்களிடையே அது சில நல்ல பழக்கங்களை ஏற்படுத்திஉள்ளது. கொரோனாவை எதிர்த்து உலக மக்களை ஒன்றாக இணைத்துள்ளது. ஒற்றுமையின் சின்னமாக, தீமைகளை எதிர்த்து போராடுபவராக இக்குழந்தை இருப்பார்' என்றார்.

சமூக வலைத்தள ஆர்வலர்களின் ஆதரவில், தற்போது இக்குழந்தை உத்திர பிரதேசத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதும் பிரபலமாகி உள்ளது.

### கொரோனா அச்சத்தின் மத்தியிலும்

## அயோத்தில் இராமர் கோயில் கட்டும் பணிகள் தொடங்கின



இந்தியாவையும் கொரோனா வைரஸ் அச்சுறுத்தி வரும் நிலையிலும் அயோத்தியில் இராமர் கோயில் கட்டும் பணிகள் தொடங்கியுள்ளன.

அயோத்தியில் சர்ச்சைக்குரிய நிலத்தில் இராமர் கோயில் கட்டலாம் என்றும் இதற்காக அறக்கட்டளை அமைக்க வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் ஏற்கனவே தீர்ப்பளித்துள்ளது. இதைத் தொடர்ந்து கோயில் கட்டும் பணிகளை மேற்கொள்ள 'ராமஜென்ம பூமி தீர்த்த ஷேத்ரா டிரஸ்ட்' என்ற பெயரில் அறக்கட்டளையை மத்திய அரசு அமைத்தது.

இந்த நிலையில் இராமர் கோயில் கட்டும் பணிகள் நேற்று தொடங்கின. இதை முன்னிட்டு சிறப்பு பூசைகள் நடத்தப்பட்டன. இன்றும் பூசைகள் தொடர்ந்து நடக்கின்றன. நாளை புதன் கிழமை காலை தற்காலிக கோயிலில் சிலைகள் வைக்கப்படும்.

புதிய இராமர் கோயில் கட்டி முடிக்கப்படும் வரை சிலைகள் தற்காலிக கோயிலில் இருக்கும். அறக்கட்டளையின் உறுப்பினர்கள் பிம்லேந்திர மிஸ்ரா, அனில்மிஸ்ராஆகியோர்முன்னிலையில் நேற்று சிறப்பு பூசைகள் நடைபெற்றன.

## இன்று மீண்டும் நாட்டு மக்களுக்கு மோடி உரை



கொரோனா வைரஸ் பரவுவதைத் தடுப்பது குறித்து இந்திய மக்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இன்று இரவு மீண்டும் உரையாற்றுகின்றார். வைரஸ் பரவுவதைத் தடுக்க மத்திய அரசும், மாநில அரசுகளும் தீவிரமான நடவடிக்கைகளை எடுத்து வரும் இரவு 8 மணிக்கு உரையாற்றுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

உலக அளவில் நாடுகளை உலுக்கி எடுத்து வரும் கொரோனா வைரஸ் இந்தியாவிலும் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தத் தொடங்கியுள்ளது. தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டிருக்கின்றபோதும் இந்தியாவில் கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 500 என்ற இலக்கத்தை நெருங்கிவிட்டது. 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

தீவிரத்தை உணர்ந்ததால் 32 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, எதிர்வரும் 31ஆம் திகதி வரை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

கொரோனா தாக்கத்தின் பின்னர் மக்களிடம் உரையாற்றிய பிரதமர் மோடி கடந்த ஞாயிற்றுக்கிழமை நாடு முழுவதும் ஒருநாள் உள்முடக்கத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். இதைச் செயல்படுத்தியபின்புதான் மாநில அரசுகள் தற்போது 144 தடை உத்தரவை பிறப்பித்துள்ளன.

இந்த சூழலில் பிரதமர் மோடி இன்று இரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறார். இது தொடர்பாக பிரதமர் மோடி தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்ட கருத்தில் மார்ச் 24ஆம் திகதி இன்று இரவு 8 மணிக்கு கொரோனா வைரஸ் தொடர்பாக நாட்டு மக்களுக்கு உரையாற்றுகிறேன் எனத் தெரிவித்துள்ளார்.




## 24 மணி நேரத்தில் டில்லியில் எவருக்கும் தொற்று இல்லை

### மாநில முதல்வர் அறிவிப்பு



இன்று காலையில் முடிவடைந்த 24 மணிநேரத்தில் இந்தியத் தலைநகர் புதுடில்லியில் கொரோனா வைரஸ் தொற்றால் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை என்று மாநில முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் அறிவித்துள்ளார். இருப்பினும் நம் முன் மிகப்பெரிய சவால் காத்திருக்கிறது என்றும் அவர் தெரிவித்தார்.

கரோனா வைரஸ் இந்தியா முழுவதும் பரவும் வேகம் அதிகரிக்கிறது. இதைத் தடுக்கும் வகையில் 32 மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு, மக்கள் வெளியே நடமாடாமல் வீட்டுக்குள் தங்கியிருக்க அறிவுறுத்தப்பட்டுள்ளனர். சமூக இடைவெளி மூலம் கொரோனாவைக் கட்டுப்படுத்த முடியும் என்பதால், பல மாநிலங்களில் ஊரடங்கு உத்தரவு அறிவிக்கப்பட்டுள்ளது. .

இந்தியாவில் இதுவரை கொரோனா வைரஸ் தாக்கத்தால் 9 பேர் உயிரிழந்துள்ளனர். பாதிக்கப்பட்டோரின் எண்ணக்கை 500ஐ நெருங்குகிறது.

தலைநகர் புதுடில்லியில் ஊரடங்கு உத்தரவு நேற்று முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 31ஆம் திகதி வரை நடைமுறையில் இருக்கும்.

டெல்லியில் கொரோனா வைரசுக்கு 30 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். எனினும் இன்று காலையுடன் முடிந்த 24 மணி நேரத்தில் புதுடில்லியில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றால் புதிதாக யாரும் பாதிக்கப்படவில்லை.

இதுகுறித்து முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் ருவிட்டரில் பதிவிட்ட கருத்தில், டெல்லி மாநிலத்தில்கடந்த 24 மணி நேரத்தில் கொரோனா வைரஸ் நோய்த் தொற்றில் ஒருவர்கூட புதிதாகப் பாதிக்கப்படவில்லை என்பதைத் தெரிவிக்கிறேன்.

கொரோனா வைரஸ் நோயில் சிகிச்சை பெற்று வந்தவர்களில் 5 பேர் குணமடைந்து வீடு திரும்பினர். இதற்காக நாம் இப்போது மகிழ்ச்சியடைக்கூடாது. மிகப் பெரிய சவால் இப்போது இருக்கிறது. இன்னும் சூழல் மாறவில்லை.

எதுவும் நமது கட்டுப்பாட்டில் இல்லை. மக்களாகிய நீங்கள் அரசு எடுக்கும் நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்

# 60 சதவீதம் பேருக்கு நோய் பரப்பிய பெண்

## தென்கொரியாவில் அதிர்ச்சி

சீயோல், மார்ச் 24

தென் கொரியா நாட்டில் கொரோனா தொற்று ஏற்பட்டவர்களில் 60 சதவீதம் பேருக்கு ஒரு பெண்ணால் மட்டும் நோய் பரவி உள்ளதாகத் தகவல் வெளியாகி இருக்கிறது.

இந்த நோய் பரவல் மிக வேகமாக இருக்கும் என்பதால் அனைத்து நாடுகளும் அவசரகால நிலை போல் கண்காணித்து வருகின்றன. இதனால் கொரோனா பாதிக்கப்பட்டவர் எங்கு சென்றார், யாரிடம் எல்லாம் பேசினார். யாருடன் தங்கினார் என்ற தகவலின்படி சுகாதார துறையினர் கட்டுப்பாட்டு பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தென்கொரியாவில் மொத்தம் 8 ஆயிரத்து 961 பேர் பாதிக்கப்பட்டனர். இதில் 111 பேர் இறந்தனர். தற்போது 3 ஆயிரத்து 166 பேர் மீண்டுள்ளனர். தொடர்ந்து பலருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் ஒரு பெண் பாதிக்கப்பட்டதும் பின்னர் அவர் மூலம் 60 சதவீதத்தினர் கொரோனாவால் பாதிக்கப்பட்டனர் என்றும் கண்டறியப்பட்டது.

பெப்ரவரி மாதம் முதல் வாரத்தில் இந்த பெண்ணுக்கு கொரோனா தாக்கம் இருந்துள்ளது. இதனையடுத்து அவர் சர்ச், நடன விடுதி மற்றும் பல்வேறு ஓட்டல்கள், ஷாப்பிங் என சென்றுள்ளார். இந்த இடங்களில் எல்லாம் அவர் கொரானாவை பரப்பி உள்ளார். இவர் மட்டும் இந்த நாட்டில் 60 சதவீத தொற்றை பரப்பி உள்ளார் என்ற அதிர்ச்சி தகவல் தற்போது தெரிய வந்துள்ளது.

ஆனால் அவருக்கு கொரோனா இருந்தது தெரியாமல் நீண்ட நாள் இருந்துள்ளது. அறியாமல் அவர் இந்த வைரசை பரப்பியுள்ளார்.



# பூத்துக்குலுங்கும் செர்ரி பூக்களை ரசிக்க ஜப்பானில் யாருமில்லை!

ஜப்பானில் செர்ரி பூக்கள் பூத்துக் குலங்கத் தொடங்கிவிட்டபோதும் வழக்கம்போல அதனை ரசிப்பதற்கு யாருமற்ற நிலையே காணப்படுகின்றது.

ஒவ்வொரு ஆண்டும் செர்ரி பூக்கள் பூத்துக் குலுங்கும் காலங்களில் 30 லட்சத்துக்கும் மேற்பட்ட ஜப்பானியர்கள் இந்தப் பூக்களைப் பார்ப்பதற்காகவும் கொண்டாடுவதற்காகவும் பொதுப் பூங்காக்களில் திரள்வார்கள்.

மார்ச் மாதத் தொடக்கம் முதல் மே மாதம் வரை ஜப்பானில் வசந்த காலம் ஆகும். இந்தக் காலப் பகுதியிலேயே செர்ரி பூக்களும் பூத்துக் குலுங்கும். தற்போது செர்ரி பூக்கள் அதிக அளவில் பூக்கத் தொடங்கி உள்ளன. புகுவோகா, ஒசாகா, நகோயா, டோக்கியோ, சென்டாய், ஹிரோஷிமா ஆகிய நகரங்களில் உள்ள பூங்காக்களில் செர்ரி பூத்துக் குலுங்குகின்றன.

கொரோனா பீதியால் பூங்காக்கள் ஆள் நடமாட்டம் இன்றி வெறிச்சோடி காணப்படுகின்றன. செர்ரி பூக்களை ரசிப்பதற்காக யாரும் பூங்காக்களுக்கு வருவதில்லை.

ஜப்பானில் கொரோனா பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக அரச தகவல்கள் தெரிவிக்கின்றன. அங்கு இதுவரையில் ஆயிரத்து 128 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளது. 42 பேர் உயிரிழந்துள்ளனர்.

நோய் கட்டுக்குள் இருப்பதால் விடுமுறை விடப்பட்ட பாடசாலைகளை விரைவில் திறக்க அரசு உத்தரவிட்டுள்ளது. நாட்டை இயல்பு நிலைக்குத் திருப்புவ தற்கான முயற்சிகள் தீவிரமாக்கப்பட்டுள்ளன.

எனினும், ஒலிம்பிக் போட்டியை நடத்துவதற்காக கொரோனா வைரஸ் பாதிப்பு பற்றிய உண்மையான தகவலை ஜப்பான் அரசு மறைப்பதான குற்றச்சாட்டுக்களும் இருக்கின்றன.

# கொலை வழக்கில் 35 ஆண்டின் பின் சந்தேகநபர் கைது

அமெரிக்காவில் 35 ஆண்டுகளுக்கு முன்னர் பெண்ணொருவர் கொலை செய்யப்பட்ட வழக்கில் சிகரெட் துண்டு ஒன்றை வைத்து சந்தேக நபரை காவல்துறையினர் கைதுசெய்துள்ளனர்.



1985ஆம் ஆண்டு ஆண்டு நடந்த புத்தாண்டுதின கொண்டாட்டத்தின்போது டோனியா மெக்கின்லே என்ற பெண் பாலியல் வல்லுறவு செய்யப்பட்டு கழுத்தை நெரித்து கொல்லப்பட்டார். அப்போது டோனியாவின் மகனுக்கு ஒரு வயது கூட ஆகவில்லை.

இந்தச் சம்பவம் நடந்து 35 ஆண்டுகளாகியும் இது தொடர்பான வழக்கில் எவ்வித முன்னேற்றமும் ஏற்பட்டிருக்கவில்லை. இந்நிலையில், டோனியா கொலை செய்யப்பட்ட இடத்திற்கு அருகே கண்டறியப்பட்ட மரபணுக்களை புளோரிடா மாகாண காவல்துறையினர் பொதுவளத்தில் (Open Source) உள்ள மரபுவழி தரவு தளத்துடன் ஒப்பிட்டு பார்த்தனர்.

அப்போது, சம்பவ இடத்தில் கண்டறியப்பட்ட மரபணுவும் தற்போது 57 வயதாகும் டேனியல் வெல்ஸ் என்பவரின் மரபணுவும் ஒத்து காணப்பட்டதை அடுத்து காவல்துறையினர் விசாரணையை தீவிரப்படுத்தினர்.

டேனியல் தூக்கி எறிந்த சிகரெட் துண்டுகளை ஆய்வு செய்த காவல்துறையினர் மீண்டுமொரு முறை அவரது மரபணு குற்றவாளியின் மரபணுவுடன் ஒத்துப்போவதை உறுதிசெய்ததை அடுத்து அவர் மீது கொலை மற்றும் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டுகளை சுமத்தி அவரை கைது செய்துள்ளனர்.

என் அம்மா வல்லுறவு செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்ட வழக்கில் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளது மிகுந்த மகிழ்ச்சியை அளித்தாலும், அவருக்கு தண்டனை வழங்கப் படும் வரை எனக்கு நிறைவு ஏற்படாது என்று 35 வயதாகும் டோனியாவின் மகன் உள்ளூர் ஊடகத்திடம் தெரிவித்துள்ளார்.



# சீனாவின் தடுப்பு நடவடிக்கைக்கு உலக சுகாதார நிறுவனம் பாராட்டு

உலகின் ஏனைய நாடுகளை மரணப் பீதிக்குள் தள்ளியுள்ள கொரோனா வைரஸ் சீனாவில் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருப்பதற்கு உலக சுகாதார நிறுவனம் பாராட்டுத் தெரிவித்துள்ளது.

இன்று உலகம் முழுவதையும் ஆட்டிப்படைக்கும் கொரோனா வைரஸ் சீனாவின் ஹூபேய் மாகாணத்தின் வுஹான் நகரில்தான் முதன் முதலில் கண்டறியப்பட்டது. நோய்த் தொற்று வேகமாகப் பரவியதால் வுஹான் நகரை தனிமைப்படுத்தியது சீன அரசு.

10 நாட்களில் பெரிய மருத்துவமனையை கட்டி முடித்து, கொரோனா பாதிப்பு உள்ளவர்களுக்கு சிகிச்சை அளித்தது. நாடு முழுவதும் கோடிக்கணக்கான மக்களை, வீட்டை விட்டு வெளியேற விடாமல் முடக்கியது.

இதனால் படிப்படியாக கொரோனா பாதிப்பு எண்ணிக்கை குறைந்து, கொரோனாவுக்கு எதிராக வெற்றி பெற்றது. கடந்த 4 நாள்களில் ஒருவர் மட்டுமே பாதிக்கப்பட்டுள்ளதாக சீனா தெரிவித்துள்ளது. ஆகையால் சீனாவின் தீவிரமான இந்நடவடிக்கையை உலக சுகாதார அமைப்பு பாராட்டியுள்ளது.

சீனாவில் மொத்தம் 81 ஆயிரத்து 93 பேருக்குத் தொற்று ஏற்பட்டது. அவர்களில் 72 ஆயிரத்து 703 பேர் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர். 3 ஆயிரத்து 270 பேர் உயிரிழந்துள்ளனர். தொற்றுக்குள்ளாகியவர்களில் 5 ஆயிரத்து 120 பேர் மட்டுமே இப்போதும் சிகிச்சை பெற்று வருகின்றனர். அவர்களில் ஆயிரத்து 749 பேரின் நிலை மோசமாக உள்ளது.

எனினும் வுகான் நகரில் கடந்த மூன்று நாள்களாக எவருக்கும் புதிதாகத் தொற்று ஏற்படவில்லை என்று சீனத் சுகாதாரத்துறை அறிவித்துள்ளது.

இதையடுத்தே நோயைக் கட்டுப்படுத்த சீன எடுத்த நடவடிக்கைகளுக்கு உலக சுகாதார நிறுவனம் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளது.

# கொரோனா பரவலைத் தடுப்பதற்கு உலக நாடுகளுக்கு உதவ சீனா தயார்

கொரோனா வைரஸின் கொலைத் தாண்டவத்தால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை விண்ணைத் தொட்டுவரும் நிலையில் நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் விடயத்தில் உலக நாடுகளுக்கு உதவத் தயார் என்று சீனா அறிவித்துள்ளது. .

சீனாவின் ஹூபேய் மாகாணத்தின் வுஹான் நகரில் தான் கரோனா வைரஸ் முதன் முதலில் கண்டறியப்பட்டது. பின்னர் அது உலக நாடுகள் அனைத்துக்கும் பரவியது.

4 மாதங்கள் கடந்த நிலையில் சீனாவில் கொரோனாவின் பாதிப்பு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.. தொடர்ந்து 5ஆவது நாளாக அங்கு புதிதாக வைரஸால் பாதிக்கப்பட்டவர்கள் ஓரிவர் மட்டுமே என்ற நிலைக்கு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

அங்கு பாதிப்புக்குள்ளான 81 ஆயிரத்து 171 பேரில் 73 ஆயிரத்து 159 பேர் தொற்றில் இருந்து மீண்டு குணமாகியுள்ளனர்.

உலகம் முழுவதும் 192 நாடுகளில் இன்று பகல் வரையில் 3 லட்சத்து 81 ஆயிரத்து 659 பேருக்கு நோய்த் தொற்று ஏற்பட்டுள்ளது. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 16 ஆயிரத்து 558 ஆக உயர்ந்துள்ளது. ஒரு லட்சத்து 2 ஆயிரம் பேர் குணமாகியுள்ளனர்.

இந்நிலையில் இந்த நோயைக் கட்டுப்படுத்த உலக நாடுகளுக்கு உதவத் தயார் என்று சீனா அறிவித்துள்ளது.

சீனாவில் கரோனா வைரஸ் பரவல் தடுப்புப்பணியில் ஈடுபட்டமருத்துவர்களில் சிலர், வெளிநாடுகளுக்குச் சென்று, அங்குள்ள மருத்துவர்களுக்கு ஏற்கனவே நேரடி உதவிகளை வழங்கி வருகின்றனர்.

சிலர் இணையத்தின் மூலமும், வெளிநாடுகளுடன் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டு வருகின்றனர். அவர்களுக்கு உலகெங்கிலும் இருந்து பாராட்டுகள் குவிந்து வருகின்றன.

மார்ச் 19ஆம் திகதி கொரோனா வைரஸ் பரவல் தடுப்புக்கான சர்வதேசப் பரிமாற்றக்கூட்டத்தில், ஸொங் நான்ஷன் உள்ளிட்ட புகழ்பெற்ற சீன நிபுணர்கள் பலர், உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மருத்துவர்களுடன் சீனாவின் அனுபவங்களையும், வழிமுறைகளையும் பகிர்ந்து கொண டனர்.

மேலும், 4 முறை நடைபெற்ற கரோனா வைரஸ் பரவல் தடுப்புக்கான சீன – ஐரோப்பிய வீடியோ கான்பரன்ஸ் மூலம், ஐரோப்பாவின் அனைத்து நாடுகளுடன் தொடர்புடைய வழிமுறைகள் மற்றும் தகவல்களை சீனா பகிர்ந்து கொண்டுள்ளது. இதுவரை 82 நாடுகளுக்கும், உலகச் சுகாதார அமைப்பு மற்றும் ஆப்பிரிக்க ஒன்றியத்துக்கும் உதவியளித்துள்ளதாகச் சீனா அறிவித்துள்ளது.

வைரஸ் நோயைக் கட்டுப்படுத்தும் வரை தொடர்ந்து உதவியளிக்க சீனா தயாராக உள்ளது என்று சீன அரசு தெரிவித்துள்ளது. 19 நாடுகளுக்கு மருத்துவ ரீதியிலான ஆலோசனைகளை வழங்க சீனா முடிவு செய்துள்ளது" என்றார் சீன வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் ஜெங் ஷுவாங். சீனாவில் நேற்றும் கொரோனா பாதிப்பால் 9 பேர் இறந்தனர். அவர்களுடன் சேர்த்து இதுவரை 3,277 பேர் உயிரிழந்துள்ளனர்.

வெளிநாடுகளில் இருந்து சீனா திரும்பிய 39 பேருக்கு வைரஸ் தொற்று இருப்பது கடந்த சில நாள்களிலும் உறுதியாகி உள்ளது. எனவே, வெளிநாடுகளில் இருந்து சீனா வருபவர்களைத் தனிமைப்படுத்தக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு




வைரமுத்து துஷியந்தன் (கொக்கட்டிச்சோலை)

# கொலைகாரன் நேரிலில்லை வலிமை காட்ட!

## ஆகவே, வீட்டுக்குள்ளேயே ஒதுங்கி இருங்கள்!!

அபிவிருத்திகள் கண்டாலும், விஞ்ஞான வளர்ச்சியில் உயர்ந்து நின்றாலும், இயற்கையின் சீற்றங்களை எதிர்கொள்வது மிகமிகக் கடினமே. ஆயுதங்கள் இருக்கலாம், ஆள்பலம் இருக்கலாம். எல்லாவற்றையும் முறியடிக்கும் பலம் இயற்கை ஒன்றிற்கே உள்ளது.

ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும், விண்கலங்களை ஏவுவதிலும் இன்றுவரை ஆர்வம் காட்டித் தம்மை பலம் பொருந்தியவர்கள் என இனங்காட்டிக்கொள்ளும் எத்தனையோ நாடுகள், இன்று கண்ணுக்குத் தெரியாத வைரஸ் தொற்றுக்குப் பயந்து, நடுங்கிக் கொண்டிருக்கின்றன. தம்மை மீறிய இயற்கை சக்திக்கு ஈடுகொடுக்க முடியாது திணறிக்கொண்டிருக்கின்றன.

எல்லை மீறிய நிலையில், கடவுளையே தியானித்துக்கொண்டிருக்கின்றனர். கொலைகாரன் நேரில் இருந்தால் தமது வலிமையை காட்டிவிடலாம். கொலைகாரனே கண்ணுக்குத் தெரியாமல் இருப்பதனால் எவ்வித வீறாப்பும் இதற்கு ஈடாகாது.

உலகமே கொரோனா வைரஸ் தொற்றினைத் தடுப்பதற்காக நாடுகளை முடக்கியும், கட்டுப்பாடுகளையும், சட்டங்களையும் விதித்தும் இருக்கின்ற நிலையில், இலங்கை நாடும் அதற்கு விதிவிலக்கில்லாதது போல், கொரோனா தொற்றுக்கு உள்ளாகி, அவற்றில் இருந்து விடுபடுவதற்காக பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

நாட்டில் உள்ள மக்களுக்கு விழிப்புணர்வுகளை ஏற்படுத்தியும், தனிமைப்படுத்தல் மையங்களை உருவாக்கியும், கண்காணிப்புக்களை மேற்கொண்டும், ஊரடங்கு சட்டத்தினை அமுல்படுத்தியும் உள்ளது.

இவை யாவும், மக்களுக்கு கொரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுவிடக்கூடாது, நாட்டில் மரணங்கள் சம்பவித்துவிடக்கூடாதென்ற நோக்கிலேயாகும்.

இதற்காக வைத்தியத் துறையினர் நோயாளிகளுடன் மிகுந்த அர்ப்பணிப்புடன் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்நிலையில் மக்கள் இவற்றிற்கு பூரண ஒத்துழைப்பை வழங்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். ஒருவருக்கு தொற்று ஏற்பட்டுவிட்டால், அவர் பலருக்கு தொற்றினை ஏற்படுத்தி விடுவார் என்ற அச்சத்தினால்தான் வீடுகளில் இருங்கள் என அரசாங்கமும் அறிவித்து வருகின்றது. அதனை செவிமடுக்கத் தவறியதனால், ஊடரடங்கு சட்டத்தினை அமுல்படுத்தி வீட்டிலே அனைவரையும் தங்கி இருக்க



வைக்கும் செயற்பாட்டை அரசு செய்துள்ளது. ஊரடங்கு சட்டத்தினை அமுல்படுத்தி இருந்தாலும் கூட அவற்றினையும் பொருட்படுத்தாது வீதியிலேயே கூடுதல், பொது இடங்களில் ஒன்றுசேருதல் போன்றன ஆங்காங்கே நடந்தேறி வருகின்றன. இதன் விளைவினால் இலங்கை நாட்டிலே இரண்டாயிரத்துக்கும் அதிகமானவர்களைக் கைது செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கின்றது.

சுகாதார துறையினரின் அறிவுறுத்தல் ஒன்றை இவ்விடத்தில் ஞாபகமூட்ட வேண்டியுள்ளது. அதவாது 'உங்களுக்காக நாங்கள் இருக்கின்றோம். நீங்கள் வீட்டில் இருங்கள்!' – எனக் கூறுகின்ற வார்த்தை மிகவும் அர்த்தமானது, ஆழமானது. இதனை கேட்டும் நாம் கேட்காதவர்கள் போன்று செயற்படுவது, எம்மையும், எம்மை சூழவுள்ளவர்களையும் அழிவுப்பாதைக்கு இட்டுச்செல்லும் நிலைப்பாடாகும்.

ஊரடங்கு சட்டத்தின் ஊடாகத்தான் மக்களை வீட்டில் இருத்தி தொற்றில் இருந்து காப்பாற்றிக் கொள்ளலாம் என அரசாங்கம் எண்ணிச் செயற்படுத்தி வருகின்றதான நிலையில், ஊரடங்கு சட்டம் தளர்த்தப்படுகின்ற போது, கொரோனா வைரஸ் தொற்று அழிந்து விட்டது என்ற நினைப்பில், சுதந்திரமாக வழமைபோன்று செயற்பட எண்ணுவது, அத்தனை நாள் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தியதற்கும் பலனில்லைபோல் என்றாகும். மக்களின் செயற்பாடு நமக்கு அப்படித்தான் தென்படுகின்றது.

அதிகமானவர்கள் கூடாதீர்கள், நெருக்கமாக நிற்காதீர்கள், ஒரு மீற்றர் இடைவெளிவிட்டு நில்லுங்கள், கைகளை அடிக்கடி கழுவுங்கள், அநாவசியமாக ஒன்றுகூடாதீர்கள், தேவைக்கு அதிகமாகச் செல்லாதீர்கள் என்ற அறிவுறுத்தல்களை வழங்கினாலும் அவை செவிடன் காதில் ஊதிய சங்குபோலவே சில வேளைகளில் நடந்தேறுகின்றன.

சீனாவில் ஆரம்பித்த தொற்று நாலு பக்கமும் கடலால் சூழப்பட்ட இலங்கைக்குள் நுழைந்திருக்கின்றது. இத்தொற்று நான்கு சுவர்களை கொண்ட ஒவ்வொருவரின் வீடுகளுக்குள்ளும் வருவதென்பது கடினமான காரியமல்ல. நமது செயற்பாடுகளே நம்வீட்டிற்கும் கொரோனா வைரஸ் தொற்று வருமா, இல்லையா என்பதனை தீர்மானிக்கும்.

இது விளையாட்டல்ல, விளையாட்டுக்கான நேரமுமல்ல. உயிரோடு போராடும் போராட்டம்.

இப்போராட்டத்தில் வெற்றிபெற அரசின் கட்டளைகளையும், அறிவுறுத்தல்களையும் செவிமடுக்க வேண்டிய தார்மீக கடமை நாட்டில் உள்ள அனைவருக்கும் உண்டு. இலங்கையில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் தொற்றின் எண்ணிக்கையை தவிர்த்து,



சுகதேகிகளாக வாழ்வதற்கு எல்லோரும் ஒன்று பட்டு உழைப்போம்.

> ஆயுதங்களை உற்பத்தி செய்வதிலும், விண்கலங்களை ஏவுவதிலும் இன்றுவரை ஆர்வம் காட்டித் தம்மை பலம் பொருந்தியவர்கள் என இனங் காட்டிக்கொள்ளும் எத்தனையோ நாடுகள், இன்று கண்ணுக்குத் தெரியாத வைரஸ் தொற்றுக்குப் பயந்து, நடுங்கிக் கொண்டிருக்கின்றன. தம்மை மீறிய இயற்கை சக்திக்கு ஈடுகொடுக்க முடியாது திணறிக்கொண்டிருக்கின்றன.



**இன்று சர்வதேச காசநோய் தினமாகும். அதனையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

# மனித குலத்தைத் தாக்குகின்ற மற்றொரு மூச்சுத் தொற்றுநோய்



காச நோயானது பொதுவாக மூச்சுத் தொகுதியில் நுரையீரலைத் தாக்கி நோயுண்டாக்கினாலும், இவை நரம்புத் தொகுதி, நிணநீர்த் தொகுதி (Lymphatic system), இரைப்பை – குடல் தொகுதி, எலும்புகள் மூட்டுகள், குருதிச் சுழற்சிப்பாதை, சிறுநீரகம், பாலுறுப்புகள், தோல் போன்ற பற்பல பகுதிகளிலும் நோயுண்டாக்க வல்லவை.
இந்நோய் பொதுவாக டி.பி (TB) எனக் குறிப்பிடப்படுகிறது. TB என்பது Tubercle bacillus (டியூபர்க்கில் பாசிலசு)அல்லது TUBERCULOSIS (டியூபர்க்குலோசிசு) என்பதன் சுருக்கமாகும்.

சில மருந்துகள் உதவியால் நோய்த் தொற்றும் வாய்ப்புள்ளவர்களுக்கு நோய் தொற்றி வராமல் தடுப்பதற்கும், நோய் வந்தவருக்கு சிகிச்சையளிக்கவும், நோயிலிருந்து மீளவும் வாய்ப்புக்கள் இருப்பினும், இந்நோயை முற்றாக வர இயலாமற் செய்வதற்கான வழிமுறைகளை இன்னமும் அறிவியலாளர்கள் கண்டு பிடிக்கவில்லை.
இந்த நோயானது இருமல், தும்மல், உமிழ்நீர் போன்றவற்றிலிருந்து காற்றில் பரவும் தன்மை கொண்டது. ஏராளமான மனிதர்களில் தொற்று ஏற்பட்டிருந்தாலும் அது ஒரு ‘மறைநிலையில்’ அல்லது துஞ்சுநிலையில் (Latent TB) காணப்படும். அப்படி உள்ளவர்களில் பத்தில் ஒரு பங்கினர் பிந்திய நிலையில் நோய் அறிகுறிகளை வெளிக்காட்டி நோய்த் தொற்றுக்கு

> **உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்நோயால் தாக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 80 – 90 இலட்சம் மக்கள் இத்தொற்று நோய்க்கு உள்ளாகின்றனர் எனவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கை கூறுகின்றது.**



**இன்று சர்வதேச காசநோய் தினமாகும்**

ஆளாகின்றனர். இவர்களுக்கு சரியான முறையில் சிகிச்சையளிக்கப்படாவிடின் அதில் ஐம்பது வீதத்திற்கு மேலானோர் இறக்கின்றனர்.
நோயைக் கண்டு பிடிக்க நெஞ்சில் X –கதிர் படப்பிடிப்பு, தோலில் செய்யப்படும் டியூபர்க்குலின் (Tuberculin) பரிசோதனை, உடல் நீர்மங்களின் நுண்ணுயிர் வளர்ப்பு மெய்த்தேர்வு (பரிசோதனை) என்பன பயன்படுத்தப்படுகின்றன. இந்த நோயைக் குணப்படுத்த கூட்டாக பல்வேறு நுண்ணுயிர்கொல்லிகள் இணைத்து, நீண்ட காலத்துக்கு கொடுக்கிறார்கள். ஆனால் தற்போது பயன்பாட்டிலுள்ள அனைத்து நுண்ணுயிர் கொல்லிகளையும் எதிர்க்கும் திறனுள்ள பாக்டீரியா கிளைவகை உருவாகியிருப்பது (Multi Drug Resistance) மிகப் பெரும் சிக்கலாகக் காணப்படுகிறது. இதனால் புதிதாக உருவாகியிருக்கும் நுண்ணுயிர் வகைக்கு மக்கள் நோயெதிர்ப்பாற்றலை இழந்து வருவதால் நோயின் வலிமை (தீவிரம்) அதிகரித்து வருகிறது. உலக நாடுகளெங்கும் உள்ள பல அறிவியலாளர்கள் ஆய்வுகள் மூலம், இதற்கான தீர்வைக் கண்டு பிடிப்பதில் முனைப்பாக உள்ளனர். ’பி.சி.ஜி’ (பா.கா.கு, BCG) எனப்படும் எதிர்ப்பூசி போட்டுக் கொள்வதும் பல நாடுகளில் நடைமுறையிலுள்ளது.



உலக மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பகுதியினர் இந்நோயால் தாக்கப்பட்டிருக்கின்றனர் எனவும், ஒவ்வொரு ஆண்டும் புதிதாக 80 – 90 இலட்சம் மக்கள் இத்தொற்று நோய்க்கு உள்ளாகின்றனர் எனவும் உலக சுகாதார அமைப்பின் அறிக்கை கூறுகின்றது. அது மட்டுமல்லாமல் ஒவ்வொரு நொடியிலும் புதிதாக ஒருவர் இந்நோய்த் தாக்கத்திற்குள்ளாகின்றார் என அறியப்படுகிறது. நோய்த்தாக்கத்திற்கு உள்ளாகும் மனிதர்களின் எண்ணிக்கை ஆண்டு தோறும் அதிகரித்து வருகிறது. எய்ட்ஸ் நோயை உருவாக்கும் எச்.ஐ.வி என அழைக்கப்படும் மனித நோயெதிர்ப்புக் குறைபாட்டு வைரசின் (HIV) தாக்கத்திற்குள்ளான நோயாளிகளில் ஏற்படக் கூடிய முக்கியமான இரண்டாவது தொற்றாக (secondary infection) இந்த காசநோயே காணப்படுகிறது. 2005 ஆம் ஆண்டில் உலக சுகாதார அமைப்பு (World Health Organization ‡ WHO) வெளியிட்ட அறிக்கையின் படி, 2003 ஆம் ஆண்டில் 88 லட்சம் மக்கள் புதிதாக நோய்த் தொற்றுக் குட்பட்டமையுடன், 17 லட்சம் மக்கள் இந்நோயினால் இறந்திருக்கிறார்கள். இந்நோயினால், ஆப்பிரிக்க நாட்டிலேயே மிக அதிகமான இறப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. வளர்ந்துவரும் நாடுகளில், 2004 ஆம் ஆண் டில், 1.46 கோடி தீவிர (நோய் முதிர்ந்த) நோயாளி களும், 89 லட்சம் புதிய நோயாளிகளும், 16 லட்சம் இறப்புக்களும், அறியப்பட்டன.

மேலும் நோயெதிர்ப்பு குறைபாட்டு நோய் (AIDS), உடலின் நோயெதிர்ப்பாற்றலை குறைக்கும் மருந்துகளின் பயன்பாடு போன்ற காரணங்களால், வளர்ச்சியடைந்த நாடுகளிலும் இந்நோய் பரவி வருகிறது. இந்நோயானது ஆசிய, ஆப்பிரிக்க நாட்டினரில் 80 வீதமும், அமெரிக்காவில் 5 முதல் 10 வீதமும்ம் காணப்ப டுகிறது

உலகக் காசநோய் நாள் உலக சுகாதார அமைப்பினால் அதிகாரபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படும் எட்டு உலகளாவிய பொதுநலனுக்கான நாள்களில் ஒன்றாகும்.

மக்களிடையே காச நோய் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துமுகமாக ஒவ்வோர் ஆண்டும் மார்ச் 24 அன்று அனுசரிக்கப்பட்டு வருகிறது. 2012 ஆம் ஆண்டில், 8.6 மில்லியன் மக்கள் காச நோயால் பாதிக்கப்பட்டனர், 1.3 மில்லியன் மக்கள் இந்நோயால் இறந்தனர். இவர்களில் பெரும்பாலானோர் குறைந்த, அல்லது நடுத்தர வருமானங் கொண்ட நாடுகளைச் சேர்ந்தோர் ஆவர்.

# இன்று ஊடரங்கு நீக்கத்தின் போது அலையெனத் திரண்ட மக்கள் கூட்டம்

யாழ்ப்பாணம்




























திருநெல்வேலி



# இன்று ஊரடங்கு நீக்கத்தின் போது அலையெனத் திரண்ட மக்கள் கூட்டம்








பருத்தித்துறை






அச்சுவேலி

# இன்று ஊடரங்கு நீக்கத்தின் போது அலையெனத் திரண்ட மக்கள் கூட்டம்





மருதனார்மடம்



# மேல் மாகாண ஆளுநரானார் எயார் சீவ் மார்ல் ரொஷான்




கொழும்பு, மார்ச் 24

மேல் மாகாண ஆளுநராக முன்னாள் விமானப் படைத் தளபதி எயார் சீவ் மார்ல் ரொஷான் குணதிலக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் இன்று அவர் நியமன கடிதத்தைப் பெற்றுக்கொண்டார்.

2006 ஜூன் மாதம் 12ஆம் திகதி விமானப் படையின் 12ஆவது விமானப்படைத் தளபதியாக பதவியேற்ற ரொஷான் குணதிலக்க 2011 பெப்ரவரி மாதம் 27ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

விமானத்துறை நிபுணராக நீண்ட காலம் சேவையாற்றிய ரொான் குணதிலக்க, இலக்கம் 03 கடல் கண்காணிப்புப் படையணி மற்றும் 04ஆவது விமானப் படையின் கட்டளை அதிகாரியாகவும் சிறிது காலம் சேவையாற்றியுள்ளார்.

விமானப்படையில் பல்வேறு பதவிகளை வகித்த அவர், விமானப்படைத் தளபதியாக பதவி வகிக்கையில் விமானப் படையின் பல்வேறு துறைகளை நவீனமயப்படுத்தி வெற்றிகரமாக யுத்தத்தை நிறைவுக்குக் கொண்டுவர பங்களிப்பு செய்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முகக்கவசங்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அனைவருமே முகக்கவசங்களை அணிந்தவாறு பங்கேற்றனர். அத்துடன் கூட்டத்தில் பங்குகொண்ட சகலரும் 3 மீற்றர் இடைவெளியைப் பேணியே அமர்ந்திருந்தனர். (ஐ)

## 101 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படையில் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்டோரின் எண்ணிக்கை 101ஆக (ஜனவரியில் பாதிக்கப்பட்ட சீனப் பெண்ணுடன் 102பேர்) அதிகரித்துள்ளது.

நாட்டில் கொரோனா தொற்று அறிகுறி உள்ளவர்கள் 229 பேர் வைத்தியசாலைகளில் கண்காணிக்கப்படுகின்றனர். அவர்களில் 6 பேர் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, வவுனியா உள்ளிட்ட 32 தனிமைப் படுத்தல் நிலையங்களில் 3 ஆயிரத்து 290 பேர்வரை தங்கவைத்து கண்காணிக்கப்படுகின்றனர். (ஐ)

## யாழ்ப்பாணத்தில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஊடகவியலாளர்களை இன்று சந்தித்தபோதே அவர் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

சுவிஸ் நாட்டிலிருந்து வந்த போதகரைத் தனிமைப் படுத்தலுக்கு உட்படுத்தாமல் யாழ்ப்பாணத்தில் பாதுகாத்தவர்கள் பொலிஸாரே. பொலிஸார் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரை அச்சுறுத்தியமை தொடர்பாகவும் ஜனாதிபதி செயலகத்தின் கவனத்துக்குக் கொண்டு சென்றிருக்கிறோம். இதனடிப்படையில் விரைவில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (ஐ-07)

## தயார் நிலையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிகாட்டுதலின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

புதுப்பிக்கப்பட்ட ஹெலிக்கொப்டரில் 12 நோயாளிகளைக் கொண்டு செல்லமுடியும்

விமான அம்புலன்ஸுடன், விமானப்படை ஊழியர்களும் மருத்துவப் பிரிவும் அவசர காலங்களில் செயல்பட தயாராக உள்ளனர்.

அதே நேரம் ஹெலிக்கொப்டர் மூலம் கிருமி நாசினிகள் தெளிக்கப்படும் என வெளியாகிய செய்திகள் தவறானவை என இராணுவப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிளிநொச்சி நகரப்பகுதியைச் சேர்ந்த ஆறு இளைஞர்கள் நேற்று மாலை 7.00 மணியளவில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளுக்காகக் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டனர். இவர்களை நீதிமன்றில் முன்னிலைப் படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனத் தகவல்கள் தெரிவித்தன.

பொலிஸ் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளபோது அனைவரையும் ஒத்துழைப்பு வழங்குமாறும், தவறும் பட்சத்தில் கைது நடவடிக்கைகள் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் தரப்பில் கூறப்பட்டுள்ளது. (ஐ)

## முகக் கவசங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நுழைய அனுமதிக்கப் படாமல் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

எனினும் இது தவறான நடவடிக்கை என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனில் ஜாசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இன்னமும் இது சமூகப் பரவல் நோயாக மாறவில்லை. எனவே முகக்கவசங்களை அணிவது அத்தியாவசியமில்லை. முகக் கவசங்களை அணியவேண்டுமாக இருந்தால் அது தொடர்பில் அறிவிக்கப்படும்.

எனவே வர்த்தக நிலையங்கள் முகக்கவசங்களை அணியவில்லை என்பதற்காகப் பொது மக்களைத் திருப்பியனுப்பக்கூடாது. அதற்கு பதிலாகச் சமூக இடைவெளி என்ற ஒரு மீற்றருக்கு ஒருவர் என்ற நடவடிக்கையை வலியுறுத்தலாம் - என்றார்.

அதேவேளை, இன்று காலை ஊரடங்கு தளர்த்தப்பட்டதை அடுத்து யாழ்ப்பாணத்தில் வர்த்தக நிலையங்கள், சந்தைகளுக்கு முகக் கவசம் அணியாமல் சென்றவர்களை, பொலிஸாரும் இராணுவத்தினரும் திருப்பி அனுப்பியதைக் காணமுடிந்தது.

குறிப்பாகத் தெல்லிப்பளைப் பகுதியில் பொலிஸார் முகக் கவசம் அணியும் நடைமுறையைத் தீவிரமாக்கியிருந்தனர். (ஐ)

## கட்சித் தலைவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாளிகையில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இலங்கையின் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் பங்குபற்றிய இந்தக் கூட்டம் காலை சுமார் மூன்று மணி நேரம் நடைபெற்றது. (கூட்டத்தில் பங்குபற்றிய தலைவர்களின் விவரம் இந்த இதழின் ஆசிரிய தலையங்கத்தில் இடம்பெற்றுள்ளது.)

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளதாக ரவூப் ஹக்கீம், எம்.ஏ. சுமந்திரன், சஜித் பிரேமதாஸ ஆகியோர் கூட்டத்தில் சுட்டிக்காட்டினர்.

உதய கம்மன்பில அதனை எதிர்த்தார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை ஏதோ ஒரு கட்டத்தில் மீளக் கூட்ட வேண்டிய தேவை வரும் என்பதை ஆளும் தரப்பு உணர்ந்துள்ளமையால், ஹக்கீம், சுமந்திரன் போன்றோரின் கருத்துக்கு இன்று பெருத்த எதிர்ப்பை அவர்கள் காட்டவில்லை என்று கூட்டத்தில் பங்குபற்றியோர் தெரிவித்தனர்.

கொரோனா நெருக்கடி, ஊரடங்கு நீக்கத்தால் எழுந்துள்ள ஆபத்து, அதற்கு மாற்றாக முன்னெடுக்கக் கூடிய நடவடிக்கைகள் குறித்து எல்லாம் இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டது.

முகக் கவசம் அணிவது இந்தக் கட்டத்தில் அவசியமானதல்ல என்றும் கூட்டத்தில் விவரிக்கப்பட்டது.

## அதி அபாயமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

அத்தியாவசியப் பொருள்கள் வீட்டுக்கே

கொரோனா வைரஸ் பரவலைக் கவனத்தில் கொள்ளும்போது கொழும்பு, கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்கள் மிகவும் இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ளன.

இந்த மூன்று மாவட்டங்களிலும் நடைமுறையில் இருந்த ஊரடங்கு சட்டம் இன்று காலை தளர்த்தப்பட்ட வேளையில் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக மக்கள் கடைகளில் அதிகளவு ஒன்றுகூடியிருந்தமை கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதற்கு பெரும் இடையூறாகும் எனச் சுகாதார அதிகாரிகள் கண்டறிந்துள்ளனர்.

எனவே எதிர்வரும் காலங்களில் அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை வீடுகளுக்கே கொண்டு சென்று விற்பனை செய்யுமாறு மொத்த விற்பனை நிலையங்களுக்கு அரசு அறிவுறுத்தியுள்ளது.

சதொச, கீல்ஸ், லாப்ஸ், ஆர்பிக்கோ, பூட் சிடி, அரலிய, நிபுண மற்றும் ஏனைய மொத்த விற்பனை நிலையங்கள் இந்தப் பணிக்காக இணைத்துக்கொள்ளப்படும்.

அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை வீடுகளுக்கே கொண்டு சென்று விற்பனை செய்யும் நிகழ்ச்சித்திட்டத்தை வினைத்திறனாக மேற்கொள்வதற்காக பஸில் ராஜபக்ஷவின் தலைமையில் செயலணி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அமைச்சுக்களின் செயலாளர்கள், மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள், வேறு அதிகாரிகள் இந்தச் செயலணியின் ஏனைய உறுப்பினர்கள் ஆவர்.

இதற்குப் பின்னர் இடர் வலயங்களாக இனம் காணப்பட்டுள்ள மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் மீண்டும் அறிவிக்கும் வரை தொடர்ந்தும் நடைமுறையில் இருக்கும்.

உணவுப் பொருள்கள் உள்ளிட்ட நுகர்வுப் பொருள்கள், மருந்துப் பொருள்கள், எரிவாயு, ஏனைய சேவைகளை தடையின்றியும் தொடர்ச்சியாகவும் மக்களுக்கு வழங்கும் திட்டம் நாளை முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

லொறி, வான், ஓட்டோக்கள், மோட்டார் சைக்கிள் உள்ளிட்ட பொருள்களை விநியோகிப்பதற்குப் பயன்படுத்திக் கொள்ளும் அனைத்து வளங்கள், வாகனங்களுக்கும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருக்கும் காலப்பகுதியில் வீதிகளில் பயணம் செய்ய அனுமதி உள்ளது - என்றுள்ளது. (ஐ)

## வறுமையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளை காலையிலிருந்து முன்னெடுக்கப்படும் என மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அனைத்து பிரதேச செயலர் பிரிவுகளிலும் அன்றாடம் கூலித்தொழில் செய்து வரும் வருமானம் குறைந்த குடும்பங்களின் விவரம் அந்தந்த கிராம சேவகர்கள் ஊடாக நேற்று திரட்டப்பட்டது.

தற்போது கோதுமை மா மாத்திரம் யாழ்ப்பாண மாவட்ட செயலக இடர் முகாமைத்துவப் பிரிவுக்குக் கிடைத்துள்ளது. அதனால் நாளை காலை முதல் பிரதேச செயலர்கள் ஊடாக மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினால் வருமானம் குறைந்த குடும்பங்களுக்கு உலர் உணவு வழங்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று மாவட்ட செயலாளர் தெரிவித்தார். (ஐ-07)



# 45 ஆயிரம் பொலிஸார் வீதிகளில் கடமையில்!

## சட்டவிரோதச் செயற்பாடுகளை தடுத்து நிறுத்துவதில் மும்முரம்

கொழும்பு,மார்ச்.24

ஊரடங்கு சட்ட விதிமுறைகளை மீறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் சட்டவிரோத செயற்பாடுகளை தடுப்பதற்குமென நாற்பத்தைந்தாயிரம் பொலிஸார் நாடளாவிய ரீதியில் வீதிகளில்களில் நிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் செய்தித் தொடர்பாளர் எஸ்.பி. ஜாலியா சேனரத்ன தெரிவித்தார்.

பொலிஸ் ஊரடங்கு உத்தரவு அடுத்த சில நாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. மேலும் காவல் துறையினருக்கு எந்தவித இடையூறும் இல்லாமல் அவர்களின் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியும்.

அத்தியாவசிய சேவைகள் மற்றும் ஊடக சேவைகளைச் செய்பவர்கள் தங்கள் அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி பொலிஸ் பகுதிகள் வழியாக பயணிக்க முடியும் என்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று தடுப்பு நடவடிக்கைகளிலும் சுகாதாரப் பகுதியினருடன் இணைந்து பொலிஸார் தீவிரமாகச் செயற்பட்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத் தக்கது .









## கொரோனா என சந்தேகிக்கப்பட்ட 6 மாத சிசு வீடு செல்வதற்கு அனுமதி

யாழ்ப்பாணம், மார்ச்.24

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தில் அனுமதிக்கப்பட்ட 6 மாத குழந்தை இன்றைய தினம் வீடு செல்ல அனுமதி வழங்கப்பட்டது.

நேற்றைய தினம் மன்னாரிலிருந்து 6 மாத குழந்தை ஒன்று கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு இருந்தது.

எனினும் அந்த குழந்தைக்கு எந்தவிதமான கொரோனா தொற்றும் ஏற்படவில்லை என்பதை யாழ்ப்பாண போதனா வைத்தியசாலை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தக் குழந்தை இன்றைய தினம் வீடு செல்ல அனுமதிக்கப்படும் என போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

மன்னாரில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது கொரோனா தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் யாழ்ப்பாண போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்ற கட்டடத் தொகுதியை தனிமைப்படுத்தல் மையமாக்குங்கள்!

### முன்னாள் ராஜாங்க அமைச்சர் கோரிக்கை



நாடாளுமன்றக்கட்டடத்தொகுதியைகொரோனா தனிமைப்படுத்தல் மத்திய நிலையமாக மாற்ற வேண்டும் என முன்னாள் ராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இங்கிரியவில் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டிய எந்தத் தேவையும் இல்லை. நாடாளுமன்றம் மற்றும் மாகாண சபைகள் இயங்காத நிலையில் அரசாங்கம் வெற்றிகரமாக செயற்பட்டுள்ளது. நாடாளுமன்றத்தை ஒரு நாள் கூட்ட 70 லட்சம் ரூபா செலவிடப்படுகிறது. அந்தப் பணத்தை விரயமாக்காது நாடாளுமன்றத்தை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்ற வேண்டும்.

இங்கிரியவில் உள்ள எனது வீட்டை கொரோனா தனிமைப்படுத்தல் நிலையமாக மாற்றுவதற்காக வழங்க விரும்புகிறேன். அதற்காக எந்த கட்டணத்தையும் அரசிடம் இருந்து நான் எதிர்பார்க்கவில்லை. – எனவும் விதுர விக்ரமநாயக்க குறிப்பிட்டுள்ளார்

காலைக்கதிர் Kalaikkathir

### ஊரடங்கும் ஊர் மக்களும்




தினம் ஒரு தலைப்பு

### சித்திரப்போட்டி

**நாளைய (25/03/2020) தலைப்பு ஊரடங்கும் ஊர் மக்களும்**

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப் படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

**மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623**

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.03.2020 இல் வெளியிடப்பெற்றது.